## 6 தேர்ச்சி: ஒன்று :- இறைவன் மட்டில் நிறை விசுவாச வாழ்வு வாழ்வர்.

# 1.6. இறை தந்தைக்குப் பணிந்த கிறிஸ்து

### இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்



மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க இயேசுவின் பெற்றோர் அவரை எருசலேமுக்குக் கொண்டு சென்றனர்.

**ஏனெனில், ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும் என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது.**

**(லூக். 2:23)**

குழந்தையைக் காணிக்கையாக ஆலயத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டுமாயின் இரு மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளைப் பெற்றோர் பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய வேண்டுமென திருச்சட்டத்தில் எழுதப்பட்டிருந்தது.

எருசலேமில் சிமியோன் என்னும் ஒரு குரு இருந்தார். தூய ஆவியை அவர் பெற்றிருந்தார். ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன் தாம் சாகப் போவதில்லை என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டிருந்தார்.


இயேசுவின் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த நிகழ்வுவழியாக கட்டளைகளை நிறைவேற்ற வேண்டுமென நாம் அறிந்து கொள்கிறோம்.

அன்று ஆலயத்தில் குழந்தைகள் காணிக்கையாக்கப்பட்டதுபோல இன்றும் சில பெற்றோர் தம் குழந்தைகளை ஆசீர்வதிப்பதற்காகக் குருக்களிடம் கொண்டு வருகின்றனர்.

காணிக்கை மாதா திருநாள் மாசி மாதம் இரண்டாம் திகதி கொண்டாடப்படுகிறது. அத்தினத்திலே விசேடமாக இந்நிகழ்வு இடம்பெறுகிறது.

## ✪ இயேசுவின் குழந்தைப் பருவம்.

சிறுபராயம் முதல் இறைதிட்டத்திற்குப் பணிந்த இயேசு தம் பெற்றோருடன் நாசரேத்துக்குச் சென்று அவர்களுக்குப் பணிந்து, அவர்களுக்கு உதவி செய்து வளர்ந்து வந்தார்.



இறைமகனாகிய இயேசு தம் பெற்றோருக்குப் பணிந்து வாழ்ந்து, அவர்களுக்குத் துணையாக அவர்களது வீட்டுக் கடமைகளில் உதவி புரிந்தார்.

**இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.**
**(லூக். 2:52)**

இயேசு வளர்ந்து வந்த முறையை லூக்கா தமது நற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் என்பதை மேலேயுள்ள திருவிவிலியப் பகுதியில் காண்கிறோம்.

இயேசுவைப்போல நீரும் உமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, அவர்களை அன்பு செய்து, அவர்களுக்கு மதிப்பளித்து, அவர்களது விருப்பத்தை அறிந்து அதற்கேற்ப வாழ்வதிலேதான் உமது வளர்ச்சி அடங்கியுள்ளதென அறிந்து கொள்ளவேண்டும். உமது வீட்டில் உமது உதவி தேவைப்படும்போது நீர் செயற்படும் முறையைப் பற்றி சிந்தித்துப் பாரும். இயேசுவைப்போல நீரும் உமது பெற்றோருக்கு உதவி செய்கின்றீரா? அவர்களது வேண்டுகோளை உதாசீனப்படுத்தி உமது விளையாட்டில் கவனமாக இருக்கிறீரா?

உமது சிறுபராயம் முதல் உம்மை அன்பு செய்து, பாதுகாத்து, உமக்காக அர்ப்பணிப்புடன் வாழும் உமது தாய், தந்தை மட்டில் நீர் நடந்து கொண்ட விதத்தை சிந்தித்துப் பாரும். உமது குறைகளுக்காக மன்னிப்புக் கேளும். கீழ்ப்படியாமலிருக்க விருப்பம் வரும்பொழுது இயேசுவைப் போல், பெற்றோர், ஆசிரியர்களுக்கு நன்முறையில் கீழ்ப்படிந்து அவர்களை அன்பு செய்ய முயற்சி செய்யுங்கள்.

**உமது வளர்ச்சி பற்றி சிந்தியும்.**

- இறைவனுக்குகந்த முறையில் வளர்தல்.
- மனிதனுக்குகந்த முறையில் வளர்தல்.
- பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து வளர்தல்.

- இவை ஒவ்வொன்றின் மட்டில் நீர் செய்யக்கூடிய செயல்கள் இரண்டு எழுதுக.
- இவற்றைச் செய்ய முயற்சி எடுக்கவும்.

## ✪ இயேசுவின் திருமுழுக்கு

**மத்தேயு 3:13−17**



**மத்தேயு நற்செய்தி 3:13−17 பகுதியை நன்கு படிக்கவும்.**

இயேசு யோர்தான் ஆற்றங்கரையில் யோவான் கையால் திருமுழுக்குப் பெற வந்தார். அப்போது யோவான், "நான்தான் உம்மிடம் திருமுழுக்குப் பெற வேண்டியவன்; நீரா என்னிடம் வருகிறீர்?" என்றார்.

இயேசுவின் மேன்மையை அறிந்த யோவான் தடுக்க முயன்றபோது, நாம் இறைதந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென இயேசு வெளிப்படுத்தினார்.

**இப்பொழுது விட்டுவிடும். கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை.**
**(மத். 3:15)**

**சிந்திக்கவும்:**

- இறைசித்தத்துக்கு நீர் பணிந்த சந்தர்ப்பங்கள் எவை?
- எப்போதாவது இறைசித்தத்தை அறிய நீர் முயற்சி செய்துள்ளீரா?
- இல்லையெனில் இறைசித்தம் உம் வாழ்வில் வெளிப்பட தூய ஆவியிடம் செபிக்கவும்.

மூவொரு கடவுள் தம்மை வெளிப்படுத்திய சந்தர்ப்பம் இயேசு யோர்தான் ஆற்றில் யோவானின் கையால் திருமுழுக்குப் பெற்றவேளை ஆகும். அவ்வேளை தூய ஆவியானவர் புறா வடிவில் அவர்மீது வந்து தங்கினார். இவர் பொருட்டு இறைவனும் பூரிப்படைந்தார்.

**அப்பொழுது, என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.**

**(மத். 3:17)**

எமது வளர்ச்சியும் இவ்வாறு அமைய வேண்டும். சிறு பராயத்தில் எமது கல்வியிலும் அறிவு வளர்ச்சியிலும் அக்கறையாக இருப்பதுபோல எமது ஆன்ம வாழ்விலும் அக்கறையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை கிறிஸ்துவின் முன்மாதிரிகை நமக்குக் கற்பிக்கின்றது. இம் மாதிரிகையைப் பின்பற்றி நாமும் ஒளியின் பிள்ளைகளாக வாழ்வோம்.

## தீப ஒளியும்

தீப ஒளியும் எரிவதற்கு – எண்ணெயை
விளக்குக் கேட்கின்றது
தெய்வ ஒளியும் எரிவதற்கு – என்னையே
தெய்வம் கேட்கின்றது
தருகின்றேன் தருகின்றேன் தெய்வமே
என்னையே தருகின்றேன்

தீப வழியில் செல்வதற்கு
தீய வாழ்வும் மறைவதற்கு
பாவ வழியைப் பழிப்பதற்கு
பலியில் கலந்தென்னைத் தருகின்றேன்
தருகின்றேன் தருகின்றேன் தெய்வமே
என்னையே தருகின்றேன்

ஒளியும் இங்கே எரிகின்றது
இருளும் எங்கோ ஒழிகின்றது
ஒளிரும் உண்மை உயர்ந்திடவே
உருகும் மெழுகாய் தருகின்றேன்
தருகின்றேன் தருகின்றேன் தெய்வமே
என்னையே தருகின்றேன்

**செயற்பாடு:**

1. மேலேயுள்ள பாடலைப் பாடவும். அதிலுள்ள செய்தியை நன்றாக அறிந்து கொள்ளவும். இப்பாடலின்படி ஒளியின் பிள்ளையாக வாழ நீர் செய்யக்கூடியவற்றைக் குறிப்பிடுக.

2. கீறிட்ட இடங்களை நிரப்புக.

அ. காணிக்கை மாதாவின் திருநாள் .................................... கொண்டாடப்படுகிறது.

ஆ. இயேசு ஆலயத்தில் ............................காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டார்.

இ. ஆண்டவரின் மெசியாவைக் காணுமுன் தாம் சாவதில்லை என தூய ஆவியால் அறிவிக்கப்பெற்றிருந்தவர் ..................................................

ஈ. குழந்தை இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த வேளையில் மோசேயின் சட்டப்படி பலியாக ஒப்புக்கொடுக்க அவரது பெற்றோர் ......................... கொண்டு வந்தனர்.

உ. இயேசு திருமுழுக்குப் பெற்றதன் வழியாக ......................................... பணிந்தார்.

## உமது வாழ்க்கைக்கு...

- இறைசித்தத்தை நிறைவேற்றத் தேவையான வழிகாட்டலை வேண்டி ஒரு செபம் எழுதவும். தினமும் இச்செபத்தைச் செபிக்கவும்.
- ஒவ்வொரு நாளும் இரவு நித்திரைக்குப் போகுமுன் ஆன்மசோதனை செய்து பாரும்! இறை சித்தத்தை மீறியிருந்தால் இறைவனிடம் பாவமன்னிப்பு கேட்கவும். இனிமேல் அப்பாவத்தைச் செய்யாமலிருக்க தீர்மானம் எடுக்கவும்
- நீரும் இறைவனுக்குப் பிரியமான பிள்ளையாயிருக்க முயற்சி செய்யவும்.